-தலைப்பு 10 – இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு மீதான விசாரணை ஆணைக்குழு

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 10- இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, இந்நிதிக்கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமத்தின் கீழ் எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்

## 1.4. நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல˙ வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், 3 வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள ் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகபரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ). ஏனைய வருமானத் தலைப்புகளின் கீழ் சேகரிக்கப்பட்ட வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய வருமானக் கணக்கில் ஆணைக்குழுவால் சேகரிக்கப்பட்ட ரூபா 43,200 ஆன தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் ஏனைய வருமானங்களில் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருக்காததுடன் பௌதீக சொத்துக்களின் கைதவிர்ப்பு மற்றும் விற்பனைகளிற்கான ஏற்பாடாக காட்டப்பட்டிருந்தது. ஆகவே, ஏனைய வருமான தலைப்புகளின் கணக்குகளில் சேகரிக்கப்பட்ட வருமானம் குறைவாக இருந்ததுடன் பௌதீக சொத்தக்களின் உரிமை மற்றும் வற்பனைகளின் கைதவிர்ப்பிற்கான ஏற்பாடு அதிகமாக இருந்தது. | முதலீட்டு நடவடிக்கைகளை பொல ஏலத்திற்கு விடப்பட்ட சகல பௌதீக சொத்தக்கள் மூலம் உருவாக்கப்பட்ட வருமானமாக ரூபா 98,080 தொகையான ஏல விற்பனைகளில் இருந்தான பெறுகைகள் கருத்திற் கொள்ளப் பட்டிருந்ததுடன் பௌதீக சொத்துக்களின் விற்பனை களிலிருந்தான வருமானத்தில் காட்டப்பட்டிருந்தது. இது காசுப்பாய்ச்சல் கூற்றில் தாக்கத்தை பாதிப்பை ஏற்படுத்தவில்லை. | ஏனைய வருமான தலைப்பிற்கு எதிரான உள்ளபடியான வருமானம் காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாக காட்டப்பட வேண்டும். |

**(ஆ) வருமானமற்ற பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவினுடைய முற்பண அறவீடுகள் ரூபா 42,010,361 ஆக இருந்த அதேநேரம் இது காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சலின் கீழ் ரூபா 39,782,951 ஆக காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 2,227,410 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | முற்பன அறவீட்டின் கீழ் முற்பண பீ கணக்கின் நாடகுறிப்புப் பதிவு தொடர்புபட்டிருக்காததுடன் காசுக் கொடுக்கல் வாங்கல் தகவல் மாத்திரம் பதியபப்ட்டிருந்தது. எவ்வாறாயினும் காசுப் பாய்ச்சல் கூற்றின் இறுதி மீதியில் பாதிப்பிருக்காததுடன் நான் எதிர்காலத்தில் காசுப் பாய்ச்சல் கூற்றறிக்கான நாட்குறிப்பு குறிப்பு பதிவில் பதிவதற்கு நடைமுறைப்படுத்தப்படும். | முற்பண சேகரிப்புகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**(இ) மூலதனச் செலவனம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 நவம்பர் 30 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டலில குறிப்பிட்டவாறு தயாரிக்க்பபட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மூலதனச் செலவினம் காசுப் பாய்ச்சல கூற்றில் முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசு செலவினத்தின் கீட் காட்டப்பட வேண்டும் ஆனால், ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகள் என்பன கொள்வனவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவால், மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவின் மூலதனச் செலவினம் ஆளணி நம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவினங்களாக காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 66,676,518 ஆக இருந்தது. | இந்த அதிகரிப்பு புனரமைப்பு மற்றும் மூலதன சொத்து முன்னேற்றம் மீதான செலவினம், இயலளவை கட்டியொழுப்புதல் மற்றும் மூலதன செலவின விடயங்கள், ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் என்பன காரணமாக உள்ளது. பௌதீக சொத்தக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளின் கீழ் 2102 மற்றும் 2103 செலவின தலைப்புகளில் மாத்திரம் செலவினங்களை உள்ளடக்கியமையால் வீழ்ச்சி உள்ளது. | அரச கணக்குகள் வழிகாட்டலில குறிப்பிட்டவாறு தயாரிக்க்பபட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மூலதன செலவினங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைளிற்கான காசு செலவினங்களின் கீழ் காட்டப்பட வேண்டும். |

**(ஈ) மூலதனக் கொடுப்பனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவினுடைய முற்பணக் கொடுப்பனவு ரூபா 39,170,875 ஆக இருந்ததுடன் இது காசுப் பாய்ச்ல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சலின் கீழ் ரூபா 36,950,987 ஆக காட்டப்பட்டிருநததுடன் இது ரூபா 2,219,888 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | முற்பண சேகரிப்புகளின் கீழ் முற்பண பீ கணக்கின் நாட்குறிப்பு பதிவு தொடர்புபட்டிருக்காததுடன் காசு கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரமே பதியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் காசுப்பாய்ச்சல் கூற்றின் இறுதி மீதியில் பாதிப்பு இருக்காததுடன் எதிர்காலத்தில் காசுப் பாய்ச்சல் கூற்றில் நாட்குறிப்பு பதிவுகளை பதிவதற்கு செயற்படுத்தப்படும். | அரச கணக்குகள் வழிகாட்டல் பிரகாரம் நாட்குறிப்பு பதிவுகள் பதியப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக்கின் இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு 2023 நவம்பர் 07 ஆந் திகதிய | 03/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை அரச | அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 03/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தயாரிக்கையில் பின்பற்றப்படும். | பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | 2023 ஆகஸ்ட் 02 இலிருந்து கடமைக்கு சமூகமளித்திருக்காத உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 172,500 தொகையான கடன் மீதி கணக்காய்வு திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | சேவையிலிருந்து விலகி சென்றிருந்த கோசலை மஞ்சனாயக்கெ காலத்திற்கு காலம் கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டது. ஆனால், கொடுப்பனவு செய்யப்படவில்லை. அவருடைய பிணைதாரரிடமிருந்து அறவிடுவதற்கு பிணைதாரரின் வேலைசெய்யும் இடத்திற்கு கடிதங்கள் அனுபப்பட்டிருந்தது. | உடனடியாக கடன் மீதிகளை அறவிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |

## 2.2 இலஞ்ச சுற்றிவளைப்புக்கள்- இலஞ்சமாக பயன்படுத்துவதற்கான முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | சட்டச் செயற்பாடுகளின் பின்னர் அல்லது மேன்முறையீட்டின் பின்னர் வழக்குகளின் தீர்ப்பு பெற்ற பின்னர் அந்த கோவைகள் தொடர்புபட்ட வழக்கு பொருட்கள் உத்தியோகத்தரின் பொருள் மீதிகளிலிருந்து பொருட் புத்தகளிலிருந்து அகற்றப்பட வேண்டும். வழக்குகளின் தீர்ப்பு வழங்கி பல ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 04 வழக்கு பொருள் விடயங்கள் உத்தியோகத்தரின் பொறுப்பிலேயே இருந்தது. | இது இன்னமும் செயற்பாட்டில் உள்ளன. | சட்டச் செயற்பாடுகளின் பின்னர் அல்லது மேன்முறையீட்டின் பின்னர் வழக்குகளின் தீர்ப்பு பெற்ற பின்னர் அந்த கோவைகள் தொடர்புபட்ட வழக்கு பொருட்கள் உத்தியோகத்தரின் பொறுப்பிலிருந்து அந்த பொருட்களை அகற்றப்பட வேண்டும். |
| (ii) | இலஞ்ச ஊழல் அதிகாரச் சட்டத்தின் 30(அ)(3) பிரிவின் பிரகாரம் சோதனைகளில் பயன்படுத்தப்பட்ட நாணயத் தாள்களிற்காக நீதி மன்றத்திற்கு என்போது பணத்தினை சமர்ப்பிக்காமல் நீதவான் நீதி மன்றத்தில் காசோலை வழங்கப்பட வேண்டும். 2023 ஆம் ஆண்டு கணிப்பீட்டுச் சபை அறிக்கைகளின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 33,795,085 தொகையான அரசாங்கத்தினுடைய நாணய | 2023 யூன் 22 ஆந் திகதிய ஆணைக்குழு கூட்டத்தில் நீதி மன்ற உடன்படிக்கை அடிப்படையில் சாத்தியமானளவு விரைவாக பணத்தை விடுவிப்பதற்கு அறிவுறுத்தல்களை பெற்றிருந்ததுடன் எதிர்காலத்தில் இதன்படி நான் செயற்படுவேன் என்றும் தெரிவித்திருந்தேன். | இலஞ்ச ஊழல் அதிகாரச் சட்டத்தின் 30(அ)(3) பிரிவின் பிரகாரம் இணங்கியொழுக வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழக்கு பொருட்கள் உத்தியோகத்தர் பொறுப்பில் இருந்தது. | | |

### 2.3. செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 இற்கமைய செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப் படாமையால் 10 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 02 முலதன செலவின விடயங்கள் என்பவற்றின் ஏற்பாட்டின் சேமிப்பு மீதிகள் ரூபா 116,261,167 ஆக இருந்ததுடன் இந்த சேமிப்புகள் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. | அந்த சேமிப்புகள் தொடர்பான விளக்கங்கள் 2023 நிதிக் கூற்றுக்களின் ஏசீஏ 2(11) இல் குறிப்பிடப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணம் 50 இற்கமைய செலவின மதிப்பீடுகள் சிக்கனமாகவும் வினைத்திறனானவும் தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.4. பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் ஆண்டு மீளாய்விற்காக ரூபா 1,057,391 ஆன தொக செலுத்தப்பட்டது. 03 பாதீட்டு செலவின விடயங்கள் தொடர்புபட்ட செலவினங்கள் நி.பி. 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | | நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டவாறு இணங்கியொழுக வேண்டும். . |

### 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

மாதிரிச் செவ்வை கணக்காய்வு ஒதுக்கீட்டின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் அவதானிக்கப்பட்ட இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| அவதானிப்புகள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | | |
| (a) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் | | | |
| (i) பிரிவு 4.2.1(இ). | மீளாய்வாண்டின் பெது ரூபா 790,395 இற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த குளிரூட்டல் சாதனம் கொள்வனவு | இந்த கொள்வனவு கொன்வனவு திட்டம் உருவாக்கிய பின்னர் ஏற்பட்ட இயந்திர | அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் ஏற்பாடுகளிற்கமைய |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | தவறு தொடர்பாக கொள்வனவு திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | செயற்பட வேண்டும். |
| (ii) பிரிவு 4.2.1(c). | பிரதான கொள்வனவு திட்டம் 06 மாதங்களை விஞ்சாத காலப் பகுதிக்குள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கொள்வனவு திட்டம் நாளது வரையாக்குவதற்கு உரிய உத்தியொகத்தரிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தன. | அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் ஏற்பாடுகளிற்கமைய செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 சனவரி 1 முதல் 2023 திசெம்பர் 31 வரை முறைப்பாட்டு குழுவிற்கு 2789 முறைப்பாடுகள் ஆணைக்குழுவால் பெறப்பட்டிருந்தது. தீர்க்கப்பட்டிருக்காத முறைப்பாடுகளின் எண்ணிக்கை 766 ஆக இருந்ததுடன் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்துடன் தொடர்பு பட்டிருக்காத ஏனைய முகவர்களிற்கு முறைப்பாடுகளின் எண்ணிக்கை 613 ஆக இருந்தது. இதன்படி முறைப்பாட்டு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் 49 சதவீதம் ஆணைக்குழுவின் அதிகாரச் சட்டத்துடன் தொடர்புபட்ட றைபாடுகளாக அல்லது போதிய உண்மையாக தகவல்கள் வழங்க்பபட்டிருக்காத முறைபாடுகளாக இருந்தன. | ஆணைக்குழு பொது மக்களால் ஆணைக்குவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் தன்மையை கட்டுப்படுத்த முடியாது. ஆனால, ஆணைக்குழு பெறப்பட்ட சகல முறைப்படுகளையும் ஏற்றுக்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஆணைக்குழு அதிகாரச் சட்டம் தொடர்புபட்ட முறைப்பாடுகள் தொடர்பில் மேலும் புலனாய்வுகளை மேற்கொள்ள வேண்டும். அதிகாரச்சட்டம் தொடர்புபட்டிருக்காத முறைப்பாடுகள் முறைப்பாடுகளின் தன்மைக்கு அமைய சம்பந்தப்பட்ட முகவருடன் தொடர்புபடுத்தப்படும். | இலஞ்ச அதிகாரச் சட்டம் தொடர்பில் பொது மக்கள் விழ்ப்புணர்வை மேலும் விருத்தி செய்யப்பட வேண்டும். |

### 3.2. நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நட்டங்கள் மற்றும் சேதங்களின் மீதிகளில் 10 ஆண்டுகளிற்கு மேல் ரூபா 34,805 உம் 02 கணக்குகளில் 05 ஆண்டுகளை விடக் குறைவாக ரூபா 411,538 தொகைகள் புலனாய்வு செய்யப்பட்டிருந்ததுடன் | வான இல. 19-9522 விபத்திற்கான நட்டம் பதிவேடுகளிலிருந்து அந் நட்டத்தை பதிவழிப்பதற்கு அனுமதிக்காக திறைசேரி செயலாளருக்கு தொடர்பு | நிதிப்பிரமாணங்களுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அறவிடப்பட்டோ அல்லது பதிவழிக்கப்பட்டோ இருக்கவில்லை. | படுத்தப்பட்டதுடன் WP CAC 7026 இன் நட்டம் பதிவழித்தல் நடைமுறை இறுதிக் கட்டத்தில் உள்ளன. | |
| (ஆ) ஆணைக்குழுவின் 04 வாகனங்களிற்கு நிகழ்ந்த விபத்தக்கள் தொடர்பில் விபத்து நடந்து 07 மாதங்களிலிருந்து 06 ஆண்டுகள் கடந்த பின்னர் நிதிப் பிரமாணம் 104(1) இன் பிரகாரம் நடாத்தப்பட்டிருந்தது. | வாகன உத்தியோகத்தர் மாற்றப்பட்டமையால் இல. 301-9385 வாகனம் தொடர்பான நடவடிக்கைகள் தாமதப்பட்டிருந்தது, ஆனால் நிதிப்பிரமாணம் 104 இன் கீழ் தொடர்புபட்ட ஏனைய வாகனங்கள் சாதாரண காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. உரிய உத்தியோகத்தர்கள் தாமதம் ஏற்படாததை உறுதிப்படுத்தவதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணங்களுடன் இணங்கியொழுக வேண்டும்.. |

## 3..3 முகாமைத்துவ நலிவகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2006 சனவரி 31 இல் வழக்கு பொருட்களின் தவறான பயன்பாடுகள் மீது நியமிக்கப்பட்ட குழு ஏலத்திற்கு விடவேண்டிய 10 கோவைகள் தெர்ர்பான 36 வழக்கு பொருள் விடயங்களை பரிந்துரைத்திருந்ததுடன் அந்த பரிந்துரைகள் வழங்கி 18 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அந்த பரிந்துரைகள் மீளாய்வாண்டு வரையும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. | பூர்த்தியாக்கப்பட்டிருந்த் மற்றும் தற்போது வரை கையளிக்கப் பட்டிருக்காத சகல வழக்கு பெருட்களின் பட்டிய் தயாரிக்கப்பட்டிருந்தது. விசாரணை குழு நியமிக்கபபட்டிருந்ததுடன் அந்த பொருட்களை விசாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததென தயவுடன் தெரிவிக்கின்றேன். | 2006 சனவரி 31 .ன் விசாரணை குழுவின் பரிந்துரைகளை அமுலாக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவினுடைய பதவியணி தகவல் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஸ்ட மட்டத்தில் 38 வெற்றிடங்களும், மூன்றாம் நிலை மட்டத்தில் 204 வெற்றிடங்களும் இரண்டாம் நிலையில் 189 வெற்றிடங்ளும் ஆரம்ப மட்டத்தில் 60 | அந்த வெற்றிடங்கள் இருந்ததுடன் அரசாங்க செவையின் ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டிருந்தும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது. உதவி பணிப்பாளர் (சட்டம்), 16 பிரதான எழுத்தாளர் பதவி மற்றும் 10 அலுவலக எழுதுனர் பதவி (பல்துறை பணி உத்தியோகத்தர்கள்) | செயற்பாடுகளை பாதகமாக பாதிக்காமல் அத்தியாவசிய பதவிகள் நிரப்பப்பட வேணடும். |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்களும் இருந்தன. | என்பவற்றினை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டிருந்ததுடன் பின்னர் ஏனைய ஆட்சேர்ப்புகள் மீளாய்வு செய்யப்பட்டன. இதன்படி அலுவலக உதவியாளரின் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிரந்ததுடன் உதவி பணிப்பாளர் (சட்டம்) பதவிக்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்ததுடன் பெறுபேறுகள் அனுமதிக்காக பொதுச சேவைகள் ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | ஆணைக்குழு 2018 இல் 200 விசாரணை உத்தியோகத்தர் பதவிகளை 30 உதவி பணிப்பாளர் (சட்டம்) மற்றும் 2019 இல் 50 ஊழல் விசாரணை உத்தியோகத்தர்கள் பதவி என்பவற்றிற்கு முகாமைத்தவ செவைகள் திணைக்களம் அனுமதித்திருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் அந்த பதவிகளில் 200 விசாரணை உத்தியோகத்தர் பதவிகள் 20 உதவி பணிப்பாளர் பதவி (சட்டம்) மற்றும் 36 ஊழல் விசாரணை உத்தியோகத்தல்கள் பதவிகள் என்பன வெற்றிடமாக இருந்ததுடன் கணக்காய்வின் பொது நிறுவனத்தின் செயலாற்றலை பாதகமாக பாதித்திருந்தமை அவதானிக்கப்படடது. | அந்த வெற்றிடங்கள் இருந்ததுடன் அரசாங்க செவையின் ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டிருந்தும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது. உதவி பணிப்பாளர் (சட்டம்), 16 பிரதான எழுத்தாளர் பதவி மற்றும் 10 அலுவலக எழுதுனர் பதவி (பல்துறை பணி உத்தியோகத்தர்கள்) என்பவற்றினை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டிருந்ததுடன் பின்னர் ஏனைய ஆட்சேர்ப்புகள் மீளாய்வு செய்யப்பட்டன. இதன்படி அலுவலக உதவியாளரின் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிரந்ததுடன் உதவி பணிப்பாளர் (சட்டம்) பதவிக்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்ததுடன் பெறுபேறுகள் அனுமதிக்காக பொதுச சேவைகள் ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டிருந்தது. | செயற்பாடுகளை பாதகமாக பாதிக்காமல் அத்தியாவசிய பதவிகள் நிரப்பப்பட வேண்டும். |